14

-193

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code Criminal Procedure)
IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.I, NAGAPATTINAM

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No: CC.9/16 CSCID PS.

Deposition of witness for :PW . 1(LW 1)

Name : குணசேகர்

Father's Name : நடேசன்
or Husband Name:

Village /Taluk : செம்பனார்கோவில்

Caste /Religion : இந்து

Age /Calling : 62

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 30 29.08.16

முதல் விசாரணை

நான் தற்போது செம்பனார்கோவிலில் வசித்து வருகிறேன். கடந்த 2012 ம் ஆண்டு திருவாரூர் துணைபதிவாளர் பொதுவினியோக திட்டமாக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். நான் நாகப்பட்டினம் பொதுவினியோக திட்டமாக பணிபுரிந்தபோது 02.08.2011 அன்று மண்டல இணைபதிவாளர் அவர்களிடமிருந்து கிடைத்த தொலைபேசி தகவலின்படி மயிலாடுதுறை கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை கிளை அங்காடி எண் FD 001 சீர்காழி வடக்கு ரதவீதியில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக ஒரு குழு அமைத்து 100% ஆய்விற்கு உத்தரவிடப்பட்டது. அந்த குழுவில் இடம்பெற்ற கூட்டுறவு சார்பதிவாளர்கள் 1. ராமலிங்கம், கூட்டுறவு சார்பதிவாளர், பொதுவினியோகதிட்டம் மயிலாடுதுறை, 2 ஆர். அதியமான், கூட்டுறவு சார்பதிவாளர், களஅலுவலர் சீர்காழி, 3. என் தனலெட்சமி, கூட்டுறவு சார்பதிவாளர், களஅலுவலர் கொள்ளிடம், 4. மணிமாறன் கூட்டுறவு சார்பதிவாளர், களஅலுவலர், செம்பனார்கோவில், 5. ராஜகோபால் கூட்டுறவு சார்பதிவாளர், களஅலுவலர், குத்தாலம் ஆகியோர்கள் கொண்ட குழு ஆய்வு மேற்கொண்டு 27.08.11 அன்று அறிக்கை சமர்பித்தனர். அந்த அறிக்கையின்படி இருப்பு குறைவு ரூ. 870.25 பைசா, போலி பில் ரூ. 9,796.71 பைசா, இரட்டிப்பு பில் ரூ. 23,386.88 பைசா, சிட்டா படி விற்பனை மோசடி ரூ. 12,742.04 பைசா ஆக கூடுதல் ரூ. 46,475.88 பைசா. முறைகேடுகள் நடந்துள்ளது தெரியவந்தது. அதன்

THE JUDDICIAL MAGISTRATE NO II
20 JAN 2025
MAYILADUTHURAI

30.8.16

அடிப்படையில் நான் 09.09.11 அன்று உணவு பொருள் கடத்தல் தடுப்பு பிரிவு காவல் துறை ஆய்வாளர் வசம் கூட்டுறவு சார்பதிவாளர் அலுவலக கண்காணிப்பாளர் மூலம் புகார் மனு கொடுத்தேன். இது சம்மந்தமாக குடிமை பொருள் குற்றப்புலனாய்வு துறை ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் இருந்தபோதிலும் குறுக்கு விசாரணை இல்லை என கூறுகிறார்.

30.8.16

30.8.16

30-08-16

THE JUDICIAL MAGISTRATE NO II
JAN 2025
MAYILADUTHURAI

C.C.9/16 CSCID PS குணசேகரன், த/பெ.நடேசன் PW1 14.06.2018

மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். கடந்த 30.09.2012 அன்று பணிஓய்வு பெற்றேன். இந்த வழக்கு சம்பவ சமயத்தில் நான் நாகப்பட்டினத்தில் துணைபதிவாளர், பொதுவினியோக திட்டத்தில் பணியாற்றினேன். நிகழ்வு நடந்தபோது சீர்காழியில் பணியாற்றினேன் என்றால் சரிதான். நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு அங்காடிகளும் நாகப்பட்டினம் துணை பதிவாளர் கண்காணிப்பின் கீழ்தான் வரும். ஆய்வறிக்கையின் அடிப்படையில்தான் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கு நான் நேரிடையாக சென்றேனா என்றால் செல்லவில்லை. 100% ஆய்விற்கு செயல்முறை ஆணை பிறப்பிக்கபடுமா என்றால் பிறப்பிக்கபட்டிருக்கும் அந்த தேதி ஞாபகமில்லை. செயல்முறை ஆணையை புகாருடன் இணைத்து கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை. புகார் கொடுத்த தேதி 09.09.2011 ஆகும். நான் புகார் மனு கொடுக்கும்போது வழக்கில் சம்மந்தப்பட்ட ஆவணங்களை இணைத்து கொடுத்தேனா என்றால் அறிக்கையை மட்டும் புகாருடன் இணைத்து கொடுத்துள்ளோம். சீர்காழி கூட்டுறவு அங்காடியை துணைபதிவாளர், பொதுவினியோக திட்டம் என்ற அடிப்படையில் சம்பவத்திற்கு முன்பு நான் ஆய்வு செய்துள்ளேனா என்றால் ஆய்வு செய்துள்ளேன் தேதி ஞாபகமில்லை. நான் முன்பு ஆய்வு செய்தபோது மேற்கண்ட அங்காடியில் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டதா என்றால் இருப்பு குறைவு கண்டுபிடிக்கப்பட்டு அபராதம் போடப்பட்டது. அது தொடர்பாக குற்றப்புலனாய்வு துறையில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் புகார் கொடுப்பதற்கு குறிப்பிட்ட தொகை நிர்ணயிக்கப்பட்டிருப்பதால் அந்த தொகை அளவிற்கு குற்றம் புரியாததால் புகார் கொடுக்கப்படவில்லை. கையாடல் செய்யப்பட்ட தொகையானது குறிப்பிட்ட தொகைக்கு மேலே இருந்தால்தான் புகார் கொடுக்கமுடியும் என்பது குறித்து சட்டத்தில் உள்ளதா அல்லது அரசு உத்தரவா என்றால் உணவுபொருள் வழங்கும் துறையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முன் இருப்பு குறைவு இருந்தபோது இருப்பு குறைவிக்கான தொகையை வசூல் செய்யப்பட்டுவிட்டதாலும் இருப்பு குறைவு தொகையானது நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு குறைவாக இருந்ததால் பணிஇடைநீக்கம் உட்பட துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவில்லை. மேற்கண்ட முன்பு ஆய்வு செய்தபோது கண்டுபிடிக்கப்பட்ட இருப்பு குறைவு மற்றும் நடவடிக்கைகளை இவ்வழக்கில் புலனாய்வு அதிகாரியிடம் கூறினேனா என்றால் அதுகுறித்து அவர்கள் கேட்காததால் நான் கூறவில்லை. அதற்குரிய ஆதாரங்களை சமர்பித்தேனா என்றால் இவ்வழக்கிற்கு

14-06-2018

அது சம்மந்தம் இல்லாதது என்பதால் ஆவணங்களை தரவில்லை. எப்போது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் தேதி ஞாபகமில்லை. என்னிடம் 13.08.12ல் புலனாய்வு அதிகாரிகள் ஆவணங்களை பெற்றார்கள். புகார் கொடுத்த காலத்திற்கும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட காலத்திற்கும் இடையே என்னை விசாரணைக்கு அழைத்தார்களா என்றால் அப்போது நான் பணியில் இல்லாததால் எனக்கு தெரியவில்லை. புகார் கொடுத்தவர் என்பதன் அடிப்படையில் எனக்கு பின்னிட்ட அதிகாரிகளை யார் யார் விசாரித்தது என்ற விவரங்களை தெரிந்து கொண்டேனா என்றால் நான் ஓய்வு பெற்றுவிட்டதால் அது சம்மந்தமாக தெரியவில்லை. ஆய்வறிக்கை கொடுக்கும்போது ஆவணங்கள் அனைத்தையும் வாங்கி பார்த்தேனா என்றால் ஆய்வறிக்கை கொடுக்கும்போது ஒருசில ஆவணங்கள் விடுபட்டிருந்ததால் அந்த ஆவணங்களை நான் கேட்டேன். ஆய்வறிக்கையின் உண்மைதன்மையினை நான் பரிசீலனை செய்தேனா என்றால் நான் பரிசீலனை செய்தபிறகே புகார் கொடுத்தேன். ஆய்வறிக்கை தாக்கல் செய்தபோது ஒருசில ஆவணங்கள் தரவில்லை என்று நான் கூறும்பட்சத்தில் மற்ற ஆவணங்களை பெற்றுக் கொண்டேனா என்றால் அனைத்து ஆவணங்களையும் மொத்தமாக தரும்படி நான் அவர்களை கேட்டேன். மேற்கண்ட ஆவணங்களை எவ்வளவு காலத்திற்குள் கொடுக்க வேண்டும் என்றால் அந்த ஆவணங்களை எடுக்க கூடிய கால அளவை பொறுத்ததாகும். ஆவணங்களின் அடிப்படையில்தான் ஆய்வறிக்கை தயாரிக்கப்படும் என்ற பட்சத்தில் அந்த ஆவணங்கள் யாருடைய வசத்தில் இருந்தது என்றால் 100% ஆய்வறிக்கை என்பதால் நகல்கள் எடுப்பதில் தாமதமாகும். காவல்துறையினர் விசாரித்தபோது என்னிடம் கையொப்பம் வாங்கி கொண்டார்கள். கூட்டுறவு சங்க சட்டம் 1983 ன் பிரிவு 81ன் படி விசாரணைக்கு உத்தரவிட்டேனா என்றால் இவ்வழக்கை பொறுத்தவரை உணவு பிரிவில் தகுந்த வழக்கு என்பதால் பிரிவு 81 ன்படியான விசாரணை தேவையில்லை. விற்பனை என்பது தொடர் நிகழ்வு என்பதால் முன் இருப்பை உறுதி செய்யாமல் இருப்பு குறைவை கண்டுபிடிக்க இயலாது என்றால் முன் இருப்பை உறுதி செய்த பிறகே இருப்பு குறைவை உறுதி செய்வார்கள். ஆய்வறிக்கையில் முன் இருப்பை உறுதி செய்திருந்தார்களா என்றால் உறுதி செய்திருந்தார்கள். எனது புகாரில் முன் இருப்பை குறித்து குறிப்பிட்டிருந்தேனா என்றால் இருப்பு குறைவிற்கான தொகையை மற்றும் இருப்பு குறைவிற்கான அளவினையும் புகாரில் குறிப்பிட்டிருந்தேன். காவல்துறையினர் விசாரணையில் முன்இருப்பை குறித்து நான் கூறினேனா என்றால் ஆரம்ப முன் இருப்பை விசாரணை செய்த அதிகாரிகளைதான் காவல்துறையினர் விசாரிப்பார்கள், என்னை அது குறித்து கேட்கவில்லை. பொதுவாக புகார் கொடுக்கும்போது ஆவணங்களை இணைத்து கொடுப்பது வழக்கம் என்றால் ஒரு மாதம் கழித்து ஆவணங்களை

அனுப்பி உள்ளோம் என்றாலும், இடைப்பட்ட காலத்தில் எதிரியை வழக்கில் சிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யான ஆவணங்களை தயாரித்து அனுப்பி உள்ளோம் என்றால்சரியல்ல. குறிப்பிட்ட தொகைக்கு மேல் இருப்பு குறைவாக இருந்தால்தான் நடவடிக்கை மேற்கொள்வது வழக்கம் என்று கூறுவது தவறு என்றாலும், இருப்பு குறைவு இருந்தாலே நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றால் சரியல்ல. ஆய்வறிக்கையின் உண்மை தன்மையை அறிந்து கொள்ளாமல் நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த தேதியிலிருந்து பணியில் இருந்தார் என்பது குறித்து நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. அதே அங்காடியில் ஆய்வு செய்த போது இருப்பு குறைவு இருந்திருந்தால் நான் புகார் கொடுத்து நடவடிக்கை மேற்கொண்டிருப்பேன் என்றாலும், அவ்வாறு அந்த அங்காடியில் இருப்பு குறைவு எதுவும ஏற்படவில்லை என்பதால்தான் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. குறைந்தபட்ச இருப்பு குறைவு ஏற்பட்டிருந்தாலும் அங்காடியில் உள்ள விற்பனையாளரை உடனடியாக மற்றொரு அங்காடிக்கு மாற்றியிருப்பேன் என்றாலும், அவ்வாறு இருப்பு குறைவு ஏற்படவில்லை என்பதால்தான் நான் எதிரியின் மீது நடவடிக்கை முன்பு நடந்த ஆய்வில் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. பிரிவு 81 விசாரணையானது சட்டபூர்வ விசாரணை என்பதால் அந்த விசாரணையை மேற்கொள்ளாமல் எதிரி மீது நடவடிக்கை எடுத்தது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. உணவு பிரிவு நடவடிக்கை என்பது வேறு, துறைரீதியான குற்றம்புரிந்த செயலின் மீதான நடவடிக்கை என்பது வெவ்வேறாகும். உணவு பிரிவுக்கு கீழான குற்றம் என்பதால் நடவடிக்கை நேரடியாக மேற்கொள்ளபட்டது. ஒரு குறைபாடு உடைய சட்டப்பூர்வ முகாந்திரம் இல்லாத ஆய்வறிக்கையின்படி எவ்வித விசாரணையும் செய்யாமல் நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

14.06.2018

கு.வி. முடிக்கப்படுகிறது.

ம.வி. இல்லை.

THE JUDDICIAL MAGISTRATE NO II MAYILADUTHURAI

JAN 2025

18.6.18

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code Criminal Procedure)
IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.I, NAGAPATTINAM

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No: CC.9/16 CSCID PS.

Deposition of witness for :PW . 2(LW 2)

Name : ராமலிங்கம்

Village /Taluk : சீர்காழி

Father's Name : கலியமூர்த்தி

Caste /Religion : இந்து

or Husband Name:

Age /Calling : 54/16

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 29.08.16

முதல் விசாரணை

நான் தற்போது கூட்டுறவு சார்பதிவாளர் களஅலுவலராக கொள்ளிடத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2011ம் வருடம் நான் கூட்டுறவு சார்பதிவாளர், பொதுவினியோக திட்டம், மயிலாடுதுறையில் பணிபுரிந்து வந்தபோது எங்கள் இணைபதிவாளர் உத்தரவுபடி மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் சீர்காழி வடக்கு ரத வீதி கிளையில் உள்ள அங்காடி எண் FD 001 என்ற அங்காடியினை 100% ஆய்வு நான், அதியமான் கூட்டுறவு சார்பதிவாளர் களஅலுவலர், சீர்காழி, திருமதி. என். தனலெட்சுமி கூட்டுறவு சார்பதிவாளர் களஅலுவலர், கொள்ளிடம், கே. மணிமாறன், கூட்டுறவு சார்பதிவாளர் களஅலுவலர், செம்பனார்கோவில், ஆர். ராஜகோபாலன், கூட்டுறவு சார்பதிவாளர் களஅலுவலர், குத்தாலம் ஆகியோருடன் இணைந்து 17.08.2011 முதல் 26.08.2011 வரை 100% ஆய்வு மேற்கொண்டபோது அந்த கடையில் உள்ள வழங்கல் பதிவேடு, தினசரி விற்பனை சிட்டா, விற்பனை பதிவேடு 2 தொகுதிகள், ஆய்வு பதிவேடு, இருப்பு பதிவேடு, ஏ ரிஜிஸ்டர், ஆகிய ஆவணங்களை பார்த்தும், குடும்ப அட்டைதாரர்களுடன் நேரிடையாக ஆய்வு செய்தும், கீழ்கண்ட குறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. என்னிடம் காட்டப்படும் பக்கம் 1 முதல் 241 வரையிலான 100% ஒட்டுமொத்த ஆய்வறிக்கை நாங்கள் கொடுத்த அறிக்கைதான். அது அதசாஆ 2. எங்களது ஆய்வில் இருப்பு குறைவு கண்டுபிடித்தோம். சர்க்கரை 61.5 கிலோ, கோதுமை 2 கிலோ, பாமாயில் 1 லிட்டர். போலி பட்டியலில் அரிசி 140 கிலோ, சர்க்கரை 7.5 கிலோ, கோதுமை 39 கிலோ கண்டுபிடிக்கப்பட்டது.

30.8.2016

THE JUDDICIAL MAGISTRATE NO II
20 JAN 2025
MAYILADUTHURAI

தினசரி பட்டியல் எழுதும்போது விற்பனையை அதிகப்படுத்தி போலி பட்டியலில் அரிசி 1028 கிலோ கண்டுபிடிக்கப்பட்டது. ஜுலை 2011ல் விற்பனை பட்டியல் மூலம் போலி பட்டியல் கண்டுபிடிக்கப்பட்டது 1,900 கிலோ. அங்காடிக்கு சம்மந்தம் இல்லாத ஆ பதிவேடு எண் குறிப்பிடபட்டு 632 கிலோ அரிசி போலியாக நுகர்வு செய்யப்பட்டது. அந்த ஐந்துஇனங்கள் மூலம் ரூ. 46,475.88 பைசா முறைகேடு மாலதி என்பவர் செய்துள்ளார் என்பது கண்டுபிடிக்கப்பட்டு அதசாஆ 2 அறிக்கையில் குறிப்பிடபட்டுள்ளது. என்னிடம் காட்டப்படுவது ஆய்வில் நாங்கள் பார்த்த வழங்கல் பதிவேடு பக்கம் 1 முதல் 451. என்னிடம் காட்டப்படுவது ஆய்வில் நாங்கள் பார்த்த தினசரி விற்பனை பதிவேடு 2 வால்யூம் ( வால்யூம் 1 , பக்கம் 1 முதல் 197, வால்யூம் 2, பக்கம் 1 முதல் 195 ) அதசாஆ 3. என்னிடம் காட்டப்படும் ஆய்வு பதிவேடு பக்கங்கள் 4,401 முதல் 4428. அதசாஆ 4 என்னிடம் காட்டப்படுவது ஆய்வு நாங்கள் ஆய்வுக்கு உட்படுத்திய வடக்கு ரதவீதி இருப்பு பதிவேடு1 முதல் அதசாஆ 5. என்னிடம் காட்டப்படுவது நாங்கள் ஆய்வுக்கு உட்படுத்திய அ பதிவேடு அதசாஆ 6. இது சம்மந்தமாக குடிமைபொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு துறை போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் இருந்தபோதிலும் குறுக்கு விசாரணை இல்லை என கூறுகிறார்.

30.8.2016

30.8.16

30.8.16

-18-

C.C.09 /16 CSCID PS ராமலிங்கம், த/பெ.கலியமூர்த்தி PW2 14.08.2018

மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் கூட்டுறவு சார் பதிவாளராக பணிபுரிந்து வருகிறேன். கள ஆய்விற்கு செல்லும்போது எத்தனை பேர் சென்றோம் என்றால் என்னை சேர்த்து மொத்தம் 5 நபர்கள் சென்றோம். 5 நபர்களும் ஒரே நாளில் ஆய்விற்கு சென்றோமா என்றால் ஒரே நாளில் தான் சென்றோம். அதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் உள்ளது. என் தலைமையில்தான் அனைவரும் சென்றோம். எனது மேல் அதிகாரி என்பவர் பொது வினியோக திட்ட துணை பதிவாளர் என்றால் சரிதான். நான் ஆய்வு செய்த ஆவணங்களை துணை பதிவாளரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். கள ஆய்விற்கு சென்ற ஆவணங்களை நான் மேல் அதிகாரியிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்துவிட்டேன். 5 நபர்களும் ஒரே நாளில் ஆய்வு ஆரம்பித்தது தொடர்பான ஆவணங்களை துணை பதிவாளிடம் ஒப்படைத்துவிட்டேனா என்றால் 5 நபர்களும் ஒரே நாளில் தொடங்கி 10 நாட்கள் கள ஆய்வு மேற்கொண்டு அது தொடர்பான ஆவணங்களையும், அறிக்கையையும் துணை பதிவாளரிடம் ஒப்படைத்தேன். மேற்கண்ட 5 நபர்களும் ஆய்வு மேற்கொண்டதற்கான பதிவேடு பராமரிக்கப்பட்டுள்ளதா என்றால் ஆய்வறிக்கையிலேயே அதற்கான ஆதாரங்கள் இணைக்கப்பட்டுள்ளன. போலி பில்கள் என்பது வேறு, இரட்டிப்பு ரசீதுகள் என்பது வேறு என்றால் சரிதான். மேற்கண்ட 5 நபர்களுக்கும் களப்பணியினை நான் தொகுத்து கொடுத்தேன். நான் இருப்பு ஆய்வினை மேற்கொண்டேனா என்றால் இருப்பு ஆய்வினை மேற்கொண்டேன். நான் களப்பணியினை மேற்கொண்டு குடும்ப அட்டைகளை சரிபார்த்தேனா என்றால் நானும் சரிபார்த்தேன். பொது வினியோக திட்ட அங்காடியில் உள்ள அனைத்து பொருட்களையும் சரிபார்த்தேனா என்றால் சரிபார்த்தேன். பொதுவாக ஒரு பொருளை குறித்து இருப்பு சரிபார்க்கும் போது எத்தனை மூட்டைகள் உள்ளன என்று மட்டுமே எண்ணி பார்த்தேன் அத்தனை மூட்டைகளையும் அளவீடு செய்ய முடியாது, ஒரு குறிப்பிட்ட மூட்டையை மட்டுமே நான் அளவீடு செய்தேன். மேற்கண்ட பணியினை எத்தனை நாளில் முடித்தேன் என்றால் ஒரே நாளில் முடித்தேன். குடும்ப அட்டைதாரர்களை விசாரணை செய்யும்போது 50 நபர்களிடம் வாக்குமூலம் பெற்றுக்கொண்டேனா என்றால் பல ஆண்டுகளாகிவிட்டதால் எத்தனை நபர்களிடம் வாக்குமூலம் பெற்றேன் என்று ஞாபகம் இல்லை, கோப்புகளை பார்த்தால்தான் சொல்ல முடியும். ஆய்வு பணி மேற்கொண்டிருந்தபோது அங்காடியில் விற்பனை பணி நடந்ததா என்றால் விற்பனை பணி நடந்தது. காவல்துறையினர் எத்தனை நாட்கள் என்னை விசாரித்தார்கள் என்றால் 1 நாளில் விசாரித்தார்கள். தற்போது கூறியுள்ள விபரங்களை காவல்துறை விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் கூறியுள்ளேன்.

குடும்ப அட்டைதாரர்களிடம் குடும்ப அட்டைகளை சரிபார்த்து வாக்குமூலம் பெற்ற விபரங்களை காவல்துறையினரிடம் விசாரணையின்போது கூறினேன். காவல்துறையினர் வாக்குமூலத்தில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் விபரங்களை அவர்களிடம் சொன்னேன், கையொப்பம் இடவில்லை. நிகழ்வு நடந்து 1 வருடம் கழித்து காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள். ஞாபகம் இல்லை என்று நான் சொல்லிய விபரங்களை 1 வருடம் கழித்து விசாரித்த காவல்துறையினரிடம் அவ்வாறு கூறினேனா என்றால் அவர்கள் அவ்வாறு கேட்கவில்லை. என் தலைமையில் கள ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளதா என்று இணை பதிவாளர் அவ்வாறு உத்தரவு பிறப்பித்துள்ளார். மேற்கண்ட உத்தரவை எனது அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளேனா என்றால் அந்த உத்தரவு தேவையில்லை என்பதால் சமர்ப்பிக்கவில்லை. காவல்துறை விசாரணையில் என் தலைமையில் கள ஆய்வு மேற்கொண்டதாக கூறியுள்ளேனா என்றால் அவ்வாறு காவல்துறையினர் கேட்கவில்லை என்பதால் நான் சொல்லவில்லை. மண்ணெண்ணெய் அங்காடியில் இருப்பில் உள்ளபோது ஆவியாகுமா என்றால் அந்த அங்காடியில் மண்ணெண்ணெய் இல்லை. என் தலைமையில் கள ஆய்வு நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என் தலைமையில் கள ஆய்வு நடந்து இருந்தால் அதற்கான ஆதாரங்களை நான் சமர்ப்பித்து இருப்பேன் என்றால் சமர்ப்பித்துள்ளேன். என் தலைமையில் கள ஆய்வு நடைபெறவில்லை என்பதால்தான் காவல்துறையினர் அவ்வாறு கேள்விகள் கேட்கவில்லை என்று சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அங்காடியில் உள்ள இருப்புகளை எடை போட்டு பார்க்காமல் இருப்பு குறைவு என கூறுவது தவறு என்றால் சரியல்ல. நான் கள ஆய்வு மேற்கொண்டபோது அங்காடியில் விற்பனை நடந்து கொண்டிருந்ததால் ஆரம்ப இருப்பு மற்றும் இறுதி இருப்பு குறித்து அறுதியிட்டு கூற இயலாது என்றால் சரியல்ல. கள ஆய்வு மேற்கொள்ளும்போது இருப்பு குறைவு பார்ப்பது மிகவும் எளிதாகும், குறைவான நேரத்திலேயே இருப்பு குறைவு குறித்து பார்த்துவிடலாம். எனக்கும், எதிரிக்கும் இடையே முன்விரோதம் இருப்பதால் அவரை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்துடன் என் தலைமையில் களப்பணி மேற்கொள்ள வேண்டுமென்று உத்தரவை ஏற்படுத்தி கொண்டு களஆய்வு மேற்கொள்ளாமல் இருப்பு சரிபார்க்காமல் தவறாக ஒரு ஆய்வறிக்கையை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வபோது கள ஆய்வு குறித்து இடைக்கால அறிக்கைகளை சமர்ப்பித்தேனா என்றால் இல்லை.

கு.வி. முடிக்கப்படுகிறது.

ம.வி. இல்லை.

என்னால் எடுத்துக்கொள்ளப்பட்டு, சாட்சி ... படித்துக் காட்டப்பட்டு ...

14/8/18

-183-

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code Criminal Procedure)
IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.I, NAGAPATTINAM

Calendar
Miscellaneous
Preliminary Register Case No: CC.9/16 CSCID PS.
Sessions
Deposition of witness for :PW . 3(LW 3)

Name : அதியமான் Village /Taluk : மயிலாடுதுறை

Father's Name : ரெங்கசாமி Caste /Religion : இந்து

or Husband Name: Age /Calling : 62/1/6

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 29.08.16

**முதல் விசாரணை**

நான் தற்போது மயிலாடுதுறை சித்தர்காட்டில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2012ம் வருடம் நான் கூட்டுறவு சார்பதிவாளர், கள அலுவலராக சீர்காழியில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். மண்டல இணைபதிவாளர் கூட்டுறவு சங்கம், நாகப்பட்டினம் அவர்களின் உத்தரவு படி கடந்த 17.08.2011 முதல் 26.08.2011 வரை சீர்காழி வடக்கு ரத வீதியில் உள்ள அங்காடிக்கு சென்று ஆய்வு செய்தோம். நான், திருமதி தனலெட்சுமி கூட்டுறவு சார்பதிவாளர் களஅலுவலர் கொள்ளிடம், கே. மணிமாறன் கே. மணிமாறன், கூட்டுறவு சார்பதிவாளர் களஅலுவலர், செம்பனார்கோவில்,ஆர். ராஜகோபாலன், கூட்டுறவு சார்பதிவாளர் களஅலுவலர், குத்தாலம், கே. ராமலிங்கம் ஆர். , பொதுவினியோக திட்டம், மயிலாடுதுறை ஆகியோருடன் 100 % ஆய்வு மேற்கொண்டோம். இருப்பினை சரிபார்த்தோம். அதில் 61.5 கிலோ சர்க்கரை, 2 கிலோ கோதுமை, 1 பாமாயில் இருப்பு குறைபாடு கண்டுபிடிக்கப்பட்டது. குடும்ப கார்டுடன் ஒப்பிட்டு சரிபார்த்தபோது போலி பில்களாக 140 கிலோ அரிசி, 7.5 கிலோ சர்க்கரை, 39 கிலோ கோதுமை குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. விற்பனைக்கு அதிகமாக விற்பனை செய்ததாக தினசரி கழித்தது 1078 கிலோ அரிசி. ஒரே குடும்ப அட்டையின் எண்ணை மீண்டும் மீண்டும் எழுதி 1916 கிலோ அரிசி குறைவாக காட்டப்பட்டிருந்தது. அதன் மொத்த மதிப்பு ரூ. 46,475.88 பைசா ஆகும். குறைபாடுகள்

THE JUDICIAL MAGISTRATE NO II MAYILADUTHURAI JAN 2025

30/8/16

கண்டுபிடிக்கப்பட்டு மண்டல இணைபதிவாளர், நாகப்பட்டினம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இது சம்மந்தமாக குடிமை பொருள் குற்றப்புலனாய்வு துறை போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர் இருந்தபோதிலும் குறுக்கு விசாரணை இல்லை என கூறுகிறார்.

30/8/16

30.8.16

-185-

C.C. 9/2016 அதியமான், த/பெ.ரெங்கசாமி, PW 3 cross 25.09.2018

மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் கூட்டுறவு சார் பதிவாளர் கள அலுவலராக சீர்காழியில் பணிபுரிந்து 2012ல் ஓய்வு பெற்றுவிட்டேன். நான் ஓய்வு பெற்றபோது இருந்த பணியில்தான் சம்பவத்தின்போதும் இருந்தேன். ஆய்வு பணி என் தலைமையில் நடைபெற்றதா என்றால் தனித்தனி குழுவாகத்தான் ஆய்வு பணியினை மேற்கொண்டோம். காவல்துறைக்கு நான் ஆய்வறிக்கை அனுப்பினேனா என்றால் இல்லை. நான் 10 அல்லது 12 குடும்ப அட்டைகளை ஆய்வு செய்து உரிய பதிவேடுகளை சரிபார்த்தேன். ஆய்வு செய்த குடும்ப அட்டைகளில் நான் கையொப்பமிட்டுள்ளேன். ஆய்வு செய்த குடும்ப அட்டைகளை காவல்துறையிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. குடும்ப அட்டைகளின் விபரம் மட்டும்தான் எனக்கு தெரியுமா என்றால் பதிவேடுகளை ஆய்வு செய்து குறை கண்டேன். மேற்கண்ட சரிபார்த்த பதிவேடுகளை காவல்துறையினரிடம் ஒப்படைத்தேனா என்றால் துணை பதிவாளர் குணசேகரனிடம் ஒப்படைத்தேன். துணை பதிவாளர் காவல்துறையினரிடம் ஒப்படைத்தாரா என்றால் எனக்கு தெரியாது. முதல் நிலை விசாரணையில் குறிப்பிட்டுள்ள விபரங்களை தான் காவல்துறையினரிடம் நான் கூறினேன். குற்ற வழக்கு பதிவு செய்யபட்டவுடன் எங்களை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எங்களை 1 முறை காவல்துறையினர் விசாரித்தார்கள். எங்களை விசாரித்து காவல்துறையினர் எழுதிகொண்டார்கள். அதில் கையொப்பமிட்டேனா என்றால் இல்லை. எத்தனை நாட்களாக ஆய்வு பணி மேற்கொண்டோம் என்று காவல்துறையினர் கேட்டார்களா என்றால் கேட்டார்கள். 1 வாரம் ஆய்வு பணி மேற்கொண்டதாக கூறினேன். இணை பதிவாளர் 100 சதவீத ஆய்வு பணியினை மேற்கொள்ளுமாறு கூறிய செயல்முறை ஆணையில் எத்தனை நாட்களுக்குள் ஆய்வு பணியினை முடிக்க வேண்டும் என்று கூறியிருந்தார்கள் என்றால் காலக்கெடு நிர்ணயிக்கப்படவில்லை. அரசு ஊழியர் என்பதால் டைரி பதிவு மேற்கொள்ள வேண்டும் என்றால் சரிதான். அந்த டைரியை காவல்துறை விசாரணையில் ஒப்படைத்தேனா என்றால் அவர்கள் கேட்காததால் ஒப்படைக்கவில்லை. எங்கள் அலுவலக பிரிவில் மூவ்மென்ட் ரிஜிஸ்டர் உள்ளதா என்றால் இல்லை டைரி தான் உள்ளது. 15 குடும்ப அட்டைதாரர்களை விசாரித்ததாக கூறும்பட்சத்தில் அவர்களிடம் வாக்குமூலம் பெற்றேனா என்றால் இல்லை. என் பணியை முடித்துவிட்டு ஆய்வறிக்கையை துணை பதிவாளரிடம் கொடுத்துவிட்டேன். நான் ஆய்வு செய்த குடும்ப அட்டைகளின்படி முறைகேடு எவ்வளவு ரூபாய்க்கு நடந்தது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. ஆய்வு மேற்கொண்ட அங்காடியில் எடை கல்லில் ஆண்டிற்கு ஒரு முறை ஆய்வு செய்து சீல் வைப்பார்கள் என்றால் சரிதான். அதற்கான அறிக்கையை பார்த்தேனா என்றால் இல்லை. காவல்துறை விசாரணையில் எந்தெந்த பகுதியில் குடும்ப அட்டைகளை ஆய்விற்கு மேற்கொண்டேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அவ்வளவு விரிவாக ஆய்வு மேற்கொண்ட பகுதிகளை பற்றி குறிப்பிடவில்லை. காவல்துறையினர் கேட்டார்களா என்றால் ஞாபகமில்லை. நாங்கள் 100 சதவீத ஆய்வு பணி மேற்கொண்டிருக்கும் பட்சத்தில் சம்பந்தபட்ட அங்காடியில் காலமுறை ஆய்வு சம்பந்தபட்ட அதிகாரியால் மேற்கொள்ளப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

25/9/18

காலமுறை ஆய்வு மேற்கொண்ட அதிகாரியின் ஆய்வில் குறைகள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தனவா என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. கள அலுவலர் என்ற முறையில் நான் காலமுறை ஆய்வு மேற்கொள்வேனா என்றால் இல்லை. வழக்கிற்குட்பட்ட அங்காடியில் காலமுறை ஆய்வு மேற்கொண்டு சம்பந்தபட்ட அதிகாரி எவ்வித குறைபாடும் கண்டுபிடிக்கவில்லை என்றாலும், குறைபாடு காணவில்லை என்றாலும், 100 சதவீத ஆய்வு என்பதன்பேரில் தவறாக எதிரியின் மீது புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னை உதவி ஆய்வாளர் தான் விசாரித்தார்.

கு.வி. முடிக்கப்படுகிறது.

ம.வி. இல்லை.

25/9/18

THE JUDICIAL MAGISTRATE NO.I MAYILADUTHURAI

187

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code Criminal Procedure)
IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.I, NAGAPATTINAM

Calendar
Miscellaneous
Preliminary Register — Case No: CC.9/16 CSCID Ps
Sessions
Deposition of witness for : PW .4 (LW 4 )

| | |
|---|---|
| Name : என். தனலெட்சுமி | Village /Taluk : சீர்காழி |
| Father's Name : சின்னதுரை | Caste /Religion : இந்து |
| or Husband Name: | Age /Calling : 61/16 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.11.16

**முதல் விசாரணை**

நான் நாகை வட்டம் சீர்காழி வட்டம் கொள்ளிடத்தில் கூட்டுறவு துறையில் சார்பதிவாளர் (களஅலுவலர்) பணிபுரிந்து ஜுலை 2014ம் ஆண்டு ஓய்வு பெற்று தற்போது சீர்காழியில் வசித்து வருகிறேன். நான் கொள்ளிடத்தில் கூட்டுறவு சார்பதிவாளராக பணிபுரிந்தபோது நாகை மண்டல இணைபதிவாளர் அவர்களின் உத்தரவின்பேரில் மயிலாடுதுறை கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் கிளை சீர்காழி வடக்கு ரதவீதி கடை எண் FD 001 ல் 100 % ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கூட்டுறவு சார்பதிவாளர் கே. ராமலிங்கம், மயிலாடுதுறை, ஆர். அதியமான் கூட்டுறவு சார்பதிவாளர், சீர்காழி, கே.மணிமாறன், கூட்டுறவு சார்பதிவாளர், செம்பனார்கோவில், ஆர். ராஜகோபால், கூட்டுறவு சார்பதிவாளர் குத்தலாம் ஆகியோருடன் நானும் சேர்ந்து ஐவரும் 100% ஆய்வு மேற்கொண்டோம். எங்களது ஆய்வில் 61.50 கிலோ ஜீனி இருப்பு குறைவு, 2 கிலோ கோதுமை, 1 பாக்கெட் பாமாயில் அன்றைய தினம் இருப்பு குறைவாக இருந்தது. நான்கு அயிட்டங்களாக அரிசி 3,766 கிலோ, கோதுமை 39 கிலோ, சீனி 7 1/2 கிலோ இவற்றின் கூட்டு தொகை ரூ. 46,475.88 பைசா போலிபில், இருப்பு குறைவு, இரட்டிப்பு பில், இருப்பை அதிகபடுத்தி காட்டுவது போன்றவற்றால் ஏற்பட்டது. இந்த ஆய்வினை 17.08.2011 முதல் 26.08.2011 வரை ஆய்வு செய்து அந்த ஆய்வறிக்கையை 27.08.2011 அன்று நாகை மாவட்ட மண்டல இணைபதிவாளருக்கு அனுப்பி வைத்தோம். அந்த அறிக்கையில் நாங்கள் ஐவரும் கையெழுத்து செய்துள்ளோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை இல்லை என வழக்கறிஞர் கூறுகிறார்.

24.11.2016
( N. DHANALAKSHMI )

THE JUDICIAL MAGISTRATE NO II
20 JAN 2025
MAYILADUTHURAI

-189-

C.C.9 /16 CSCID PS தனலெட்சுமி, க/பெ.சின்னதுரை PW4 10.07.2018

மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தற்போது பணிஓய்வு பெற்றுவிட்டேன். நான் பணி ஓய்வு பெற்றபோது கூட்டுறவு சார்பதிவாளர், கள அலுவலராக பணிபுரிந்தேன். நான் ஆய்வுக்கு சென்றபோது யார் யாருடன் சென்றேன் என்று தெரியுமா என்றால் தெரியும். ஆய்வின்போது நான் குறிப்பிட்டு எந்த பொருளை ஆய்வு செய்தேன் என்றால் குறிப்பிட்ட குடும்ப அட்டைகளில் வழங்கப்பட்டுள்ள வினியோக அளவுகளையும், நியாய விலை கடையில் உள்ள இருப்பு பதிவேடுகளில் அந்த குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்ட வினியோக அளவினையும் ஒப்பீடு செய்து சரிபார்த்தேன். குறிப்பாக எத்தனை குடும்ப அட்டைகளை ஆய்வு செய்தேன் என்றால் தற்போது நினைவில்லை. குடும்ப அட்டைதாரர்களை விசாரணை செய்ததற்காக வாக்குமூலம் பெற்றேனா என்றால் இல்லை. நான் ஆய்விற்கு சென்றபோது அந்த நியாய விலைகடையின் ஆரம்ப இருப்பை பார்வையிட்டேனா என்றால் பார்வையிடவில்லை. ஆரம்ப இருப்பை பார்க்காமல் எவ்வளவு இருப்பு குறைவு என்பதை குறிப்பிட இயலாது என்றால் எனக்கு நினைவில்லை. இது தொடர்பாக காவல்துறையினர் விசாரித்தபோது நான் கூறினேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. யார் யார் ஆய்வு பணிக்கு சென்றது குறித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா என்றால் தொலைபேசிமூலம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது, எழுத்துமூலமாக இல்லை. ஒரு நியாய விலை கடையில் ஆய்வின்போது விற்பனை தொடர்ந்து நடைபெறுமா என்றால் ஆய்வின்போது விற்பனை நிறுத்தி வைக்கப்படும். ஆரம்ப இருப்பு குறித்து காவல்துறையினரிடம் விசாரணையில் கூறினேனா என்றால் ஞாபகமில்லை. எந்த வழக்கிற்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்று தெரியுமா என்றால் தெரியும். லாரியில் மொத்தமாக பொருட்கள் நியாய விலை கடைக்கு வரும்போது இருப்பு குறைவு ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் உண்டு. இருப்பு குறைவு லாரியிலிருந்து வரும்போது ஏற்பட்டதா, அழிமானத்தில் ஏற்பட்டதா, விற்பனையில் ஏற்பட்டதா என்பதை நேரடியாக பார்த்தேனா என்றால் நாங்கள் ஆய்வு செய்தபோது இருப்பு குறைவு இருந்தது. ஆய்வறிக்கையில் என் கையெழுத்து உள்ளது. அந்த ஆய்வறிக்கை பற்றி காவல்துறையினர் விசாரணையில் என்னை விசாரித்தார்களா என்றால் நான் கூறினேன். ஆய்வறிக்கை பற்றி கூறினேனா என்று ஞாபகமில்லை. ஆய்வினை 17.08.2011 முதல் 26.08.2011 வரை மேற்கொண்டோம். 17.08.11 தவிர மற்ற நாட்களில் நியாய விலை கடையில் விற்பனை நிறுத்தப்பட்டிருந்ததா என்றால் ஞாபகமில்லை. கள ஆய்விற்கு சென்றபோது தொலைபேசி மூலம் தகவல் வந்ததாக நான் கூறும்பட்சத்தில் அது குறித்து

அசைவு பதிவேடு (மூவ்மென்ட் ரிஜிஸ்டரில்) உள்ள பதிவுகள் குறித்து காவல்துறையினரிடம் கூறினேனா என்றால் ஞாபகமில்லை. அங்காடியில் ஒழுங்குப்படுத்தபட்ட விற்பனை பொருட்களும், முறைபடுத்தப்படாத விற்பனை பொருட்களும் இருக்கும்பட்சத்தில் எது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்றால் கோப்புகளை பார்த்துதான் சொல்லமுடியும். எனக்கு நேரடியாக எவ்வளவு இருப்பு குறைவு ஏற்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியும், அது குறித்து எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். எந்த பகுதியில் நான் ஆய்வினை மேற்கொண்டேன் என்றால் தற்போது ஞாபகமில்லை. மேற்கண்ட நியாய விலை கடைக்குள்ள குடும்ப அட்டைகள் அனைத்தையும் ஆய்வு செய்தேனா என்றால் எனக்கு ஒதுக்கப்பட்ட குடும்ப அட்டைகளை ஆய்வு செய்தேன். குறிப்பிட்ட குடும்ப அட்டைகளை மட்டும் ஆய்வு செய்து இருப்பு குறைவு குறித்து அறுதியிட்டு கூறமுடியுமா என்றால் மொத்தமான இருப்பு குறைவை கூற முடியாது, இருப்பு குறைவு குறித்து கூறமுடியும். நான் குடும்ப அட்டைகளை ஆய்வு செய்ததற்கான குறிப்புகள் ஆய்வறிக்கையில் உள்ளதா என்றால் உள்ளது. என்னுடைய ஆய்வறிக்கையில் ஆரம்ப இருப்பு, இருப்பு குறைபாடு, இறுதி இருப்பு பற்றி குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி இருப்புகள் குறித்து காவல்துறையினர் விசாரித்தார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை, ஆனால் வாக்குமூலம் கொடுத்துள்ளேன். எத்தனை பக்கத்தில் கையொப்பம் இட்டேன் என்று ஞாபகமில்லை. எனக்கு வழக்கின் விவரங்கள் தெரியவில்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10.7.2018

கு.வி. முடிக்கப்படுகிறது.

ம.வி. இல்லை.

10.7.18 10.7.18

-191-

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code Criminal Procedure)
IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.I, NAGAPATTINAM

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No: CC.9/16 CSCID Ps

Deposition of witness for :PW .5 (LW 5)

Name : கே. மணிமாறன்

Village /Taluk :

Father's Name : கிருஷ்ணமூர்த்தி

or Husband Name:

Caste /Religion :

Age /Calling : 50/

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.11.16

**முதல் விசாரணை**

நான் தற்போது கூட்டுறவு சார்பதிவாளர்/களஅலுவலர் குத்தாலம் மயிலாடுதுறை சரக துணை பதிவாளர் அவர்களின் கட்டுப்பாட்டில் பணிபுரிந்து வருகிறேன். நான் 2011ம் வருடம் கூட்டுறவு சார் பதிவாளர்/களஅலுவலராக செம்பனார்கோவிலில் பணிபுரிந்தபோது நாகை கூட்டுறவு மண்டல இணைபதிவாளர் அவர்களின்அறிவுறுத்தலின் பேரில் கூட்டுறவு சார்பதிவாளர் / களஅலுவலர் திருமதி. என். தனலெட்சுமி, மயிலாடுதுறை, ஆர். அதியமான் கூட்டுறவு சார்பதிவாளர், சீர்காழி, ஆர். ராஜகோபால், கூட்டுறவு சார்பதிவாளர் குத்தலாம், கே. ராமலிங்கம், கூட்டுறவு சார்பதிவாளர் பொதுவினியோக திட்டம், மயிலாடுதுறை ஆகிய ஐந்து நபர்கள் அடங்கிய குழுவினர் FD 001 சீர்காழி வடக்கு ரதவீதி என்ற பொதுவினியோக திட்ட அங்காடியில் ஆய்வு 100% மேற்கொண்டோம். நாங்கள் அந்த ஆய்வினை 17.08.2011 முதல் 26.08.2011 வரை மேற்கொண்டு அந்த ஆய்வில் இருப்பு குறைவு மற்றும் போலி பட்டியல் தயாரிப்பு ஆகிய இனங்கள் தொடர்பாக கடுங்குறைகள் கண்டறிந்தோம். அதில் இருப்பு குறைவு பொருத்தவரை 61 1/2 கிலோ ஜீனி, 2 கிலோ கோதுமை, 1 பாக்கெட் பாமாயில் ஆக கூடுதல் ரூ. 870.25 பைசா மதிப்பாகும். போலிபட்டியல் பொறுத்தவரை அரிசி 3,766 கிலோ,கோதுமை 39 கிலோ மற்றும் சீனி 7 1/2 கிலோ அளவிற்கும் ஆக மொத்த மதிப்பு ரூ. 46,475.88 பைசா அளவிற்கு முறைகேடுகள் கண்டறியப்பட்டது. அந்த சமயத்தில் அங்கு மாலதி என்பவர் விற்பனையாளராக பணிபுரிந்துவந்தார். அந்த ஆய்வறிக்கையை நாகப்பட்டினம் மண்டல இணைபதிவாளர் அவர்களுக்கு 27.08.2011ல் மேற்குறிப்பிட்ட நான் உட்பட ஐந்து நபர்களும் கையெழுத்து செய்து அனுப்பிவைத்தோம். 13.08.2013ல் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை இல்லை என வழக்கறிஞர் கூறுகிறார்.

24/11/16

24.11.16

THE JUDICIAL ... NO II
29 JAN 2025
MAYILADUTHURAI

- 193 -

C.C. 09 /2016 மணிமாறன் த/பெ.கிருஷ்ணமூர்த்தி, PW 5 cross 25.09.2018

மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தற்போது கூட்டுறவு சார் பதிவாளராக மயிலாடுதுறையில் பணிபுரிந்து வருகிறேன். 17.08.2011 முதல் 26.08.2011 அல்லது 27.08.2011 வரை சம்பவம் தொடர்பாக 100 சதவீத ஆய்வு பணி மேற்கொண்டேன். அங்காடிக்கு சென்ற அன்றே ஆய்வு பணியினை மேற்கொண்டேன். என்னுடைய தலைமையில் ஆய்வு பணி மேற்கொள்ளப்பட்டதா என்றால் இல்லை. ஆய்வு பணி ஆரம்பித்த அன்றே அங்காடி இருப்பு விபரங்களை சரிபார்த்தேனா என்றால் எனது குழுவில் உள்ள மற்றொருவர் சரிபார்த்தார். இறுதியிருப்பு எவ்வளவு இருந்தது என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. பொருட்களின் இருப்பு குறித்து பொருட்களை ஆய்வு செய்தேனா என்றால் இல்லை. எனது ஆய்வறிக்கையை எனது குழுவில்தான் சமர்ப்பித்தேன். மேற்கண்ட ஆய்வறிக்கையை மேற்கொண்டது யார் என்றால் ராமலிங்கம் என நினைக்கிறேன் சரியாக ஞாபகமில்லை. ஆய்வு பணியில் நான் தனியாக அறிக்கை சமர்ப்பிக்கவில்லை. வாக்குமூலங்களை தான் சமர்ப்பித்தேன். குடும்ப அட்டைகளில் குறைபாடு கண்டுபிடித்தால் குடும்ப அட்டைதாரர்களிடம் வாக்குமூலம் பெற்று அதனை எங்கள் குழு ஒருங்கிணைப்பாளரிடம் கொடுத்துள்ளேன். எதிரி குற்றம் புரிந்துள்ளார் என்பதற்கான பிரதான ஆதாரம் மேற்கண்ட குடும்ப அட்டைதாரர்களின் வாக்குமூலம் என்றால் சரிதான். அந்த ஆதாரத்தை காவல்துறையினரிடம் கொடுத்திருப்பார்கள் என்றால் சரிதான். அந்த ஆதாரத்தை என்னிடம் காண்பித்துதான் காவல்துறையினர் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எத்தனை வாக்குமூலங்களை என்னிடம் காண்பித்து காவல்துறையினர் விசாரித்தார்கள் என்றால் ஞாபகமில்லை. என்னை விசாரித்த விபரங்களை காவல்துறையினர் எழுதிகொண்டார்களா என்றால் எழுதிகொண்டார்கள். என்னை காவல்துறையினர் 13.08.2012ல் விசாரித்திருப்பார்கள் என நினைக்கிறேன். நான் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. துணை பதிவாளர் அலுவலகத்தில் மயிலாடுதுறையில் எங்களை விசாரித்தார்கள். காவல்துறை அதிகாரி ஒருவர்தான் விசாரித்தார். அவருடைய பணித்தகுதி தெரியவில்லை. குடிமை பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு பிரிவில் வந்துதான் விசாரித்தார்கள். என்னை தவிர வேறு யாரையாவது அன்று விசாரித்தார்களா என்றால் தெரியவில்லை. எனது குறிப்பேட்டை (டைரி) வாங்கி பார்த்தார்களா என்றால் இல்லை. எனது ஆய்வுக்கு முன்பு எப்பொழுது ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்று தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொள்ளவில்லை. நாங்கள் ஆய்வு பணிக்கு சென்றபோது அங்காடியில் விற்பனை நடந்ததா என்றால் சென்ற முதல் நாள் அன்று விற்பனை நடந்தது. எந்த பகுதி ஆய்வுக்கென எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியாக தெரியவில்லை. 100 சதவீத ஆய்வுப்பணி என்றால் அனைத்து குடும்ப அட்டைதாரர்களையும் விசாரிக்க வேண்டுமென்றால் அங்கிருந்த நபர்களை மட்டும் விசாரித்தோம். இருந்த நபர்களை ஆய்வு செய்ததை வைத்து குறைபாடு கண்டுபிடிக்க இயலாது என்றால் நடைமுறைக்கு சாத்தியமில்லை. நான் முகாந்திரம் இல்லாத அறிக்கையை தாக்கல் செய்து அதன் அடிப்படையில் பொய்புகார் எதிரியின்மீது போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தொடர்ச்சியாக

25/09/18

விற்பனை நடந்துகொண்டிருக்கும் போது இறுதியிருப்பு கண்டுபிடிக்க இயலாது என்றால் சரியல்ல.

கு.வி. முடிக்கப்படுகிறது.

ம.வி. இல்லை.

THE JUDICIAL MAGISTRATE NO I
JAN 2025
MAYILADUTHURAI

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code Criminal Procedure)
IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.I, NAGAPATTINAM

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No: CC.9/16 CSCID Ps

Deposition of witness for :PW .6 (LW 6 )

Name : ராஜகோபாலன்
Father's Name : ராஜாங்கம்
or Husband Name:

Village /Taluk : மயிலாடுதுறை
Caste /Religion : இந்து
Age /Calling : 56//6

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.11.16

**முதல் விசாரணை**

நான் தற்போது கூட்டுறவு சார்பதிவாளர், பொதுவினியோக திட்டம் மயிலாடுதுறையில் பணிபுரிந்து வருகிறேன். நாகப்பட்டினம் மண்டல இணைபதிவாளர் அவர்களின் உத்தரவு படி கூட்டுறவு சார்பதிவாளர்/களஅலுவலர், குத்தாலத்தில் 2011ல் பணியில் இருந்தபோது நானும், கே. ராமலிங்கம், கூட்டுறவு சார்பதிவாளர் பொதுவினியோக திட்டம், மயிலாடுதுறை, ஆர். அதியமான் கூட்டுறவு சார்பதிவாளர், சீகாழி, திருமதி. என். தனலெட்சுமி, கூட்டுறவு சார்பதிவாளர் / களஅலுவலர், சீகாழி மற்றும் கே. மணிமாறன் கூட்டுறவு சார்பதிவாளர்/ களஅலுவலர், செம்பனார்கோவில் ஆகிய ஐந்து நபர்களும் மயிலாடுதுறை கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கிளை சீகாழி வடக்கு ரதவீதியில் உள்ள FD 001 என்ற அங்காடியினை 17.08.2011 முதல் 26.08.2011 வரை 100% ஆய்வு மேற்கொண்டோம். அந்த ஆய்வில் இருப்பு குறைவு சர்க்கரை 61 1/2 கிலோ, கோதுமை 2 கிலோ, பாமாயில் 1 பாக்கெட் (1 லிட்டர்) ஆகியவற்றின் தொகை ரூ. 870.25 பைசா மதிப்பாகும். மற்ற நான்கு இனமாக போலியில் தயாரித்தல் மற்றும் குடும்ப அட்டை இல்லாமல் பொருட்கள் வினியோகம் செய்த வகையில் அரிசி 3,766 கிலோ, மற்றும் சீனி 69 கிலோ, கோதுமை 39 கிலோ இவற்றின் மொத்த கூட்டுதொகை மதிப்பு ரூ. 46,475.88 பைசா என்பதனை இருப்பு குறைவு மற்றும் போலியில் தயாரித்து மோசடி செய்துள்ளார் என்று கண்டுபிடித்தோம். இந்த அறிக்கையினை கடந்த 27.08.2011 அன்று நாகப்பட்டினம் மண்டல இணைபதிவாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தோம். அந்த அறிக்கையில் நாங்கள் ஐந்து நபர்களும் கையெழுத்து செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை இல்லை என வழக்கறிஞர் கூறுகிறார்.

24.11.16

வாய்மொழியாக எழுதப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

24.11.16
நீதித்துறை நடுவர்
நாகப்பட்டினம்

THE JUDDICIAL MAGISTRATE NO II
JAN 2025
MAYILADUTHURAI

-197-

C.C.09/16 CSCID PS ராஜகோபாலன், த/பெ.ராஜாங்கம் PW6 14.08.2018

மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தற்போது பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். எனது உயர் அதிகாரி துணை பதிவாளர் என்றால் இணை பதிவாளர். துணைப்பதிவாளர் கட்டுப்பாட்டில்தான் பணிபுரிகிறேன் என்றால் சரிதான். துணைப்பதிவாளர் இடும் பணியை தான் நான் மேற்கொள்வேன் என்றால் சரிதான். இணைப்பதிவாளர் தான் அலுவலக நடைமுறை உத்தரவுகளை பிறப்பிப்பார். துணைப்பதிவாளரின் தலைமையில்தான் ஆய்வு பணியினை மேற்கொள்வேன் என்றால் சரிதான். நான் கூட்டுறவு சார்பதிவாளர் தான். பொதுவாக கூட்டுறவு சார்பதிவாளர்கள் நிறையபேர் ஆய்விற்கு செல்லும்போது ஒரே நிலையில் உள்ள நபர்களை தலைமையாக நியமிக்க இயலாது என்றால் இவ்வழக்கில் ராமலிங்கத்தின் தலைமையில் ஆய்வு மேற்கொள்ள உத்தரவிடப்பட்டிருந்தது. களப்பணியினை 10 நாட்களாக நடத்தினோம். நான் எந்த பகுதிக்கு சென்று களப்பணி ஆய்வு மேற்கொண்டேன் என்றால் வடக்கு ரதவீதி சீர்காழியில் ஆய்வு பணியினை மேற்கொண்டேன். வடக்குரதவீதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் எத்தனை நபர்களை விசாரித்தேன் என்றால் 100க்கு மேற்பட்ட குடும்ப அட்டைகளை வாங்கி விசாரித்தேன். அ பதிவேடு அங்காடியில்தான் இருக்கும் என்றால் சரிதான். குடும்ப அட்டைகளை அட்டைதாரரின் வீட்டிற்கு சென்று பார்த்துவிட்டு கொடுத்துவிட்டு வந்தேனா என்றால் குடும்ப அட்டைகளை சரிபார்த்து அங்காடிக்கு வந்து பதிவேடுகளுடன் சரிபார்த்தேன். 120 நபர்களையும் 10 நாட்களில் பார்த்தேன். சரிபார்த்த அனைத்து நபர்களிடம் வாக்குமூலம் பெற்றேனா என்றால் நான் வாக்குமூலம் வாங்கவில்லை. காவல்துறையினர் என்னை இருமுறை விசாரித்தார்கள். காவல்துறையினர் என்னை 13.08.2012 அன்று விசாரித்தார்கள். காவல்துறையினர் என்னை காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். குறுக்கு விசாரணையில் சொன்ன விவரங்களை காவல் துறை விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். 120 நபர்களை விசாரணை செய்தது குறித்து வாக்குமூலம் பெறவில்லை என்பது குறித்து காவல்துறை விசாரணையில் கூறினேனா என்றால் ஞாபகமில்லை. பொதுவாக அங்காடிக்கு கொண்டு செல்லும் பொருட்களில் இருப்பு குறைவு ஏற்படுவது பொதுவானது என்றால் தெரியாது. களப்பணி ஆய்விற்கு தலைமை வகித்த ராமலிங்கம் புகாரினை கொடுத்தாரா என்றால் இணைப்பதிவாளர் தான் புகார் கொடுத்தார். பொதுவாக பயண நாட்குறிப்பேட்டை நான் பராமரிக்கும்பட்சத்தில் களப்பணி ஆய்வு மேற்கொண்டதற்கான குறிப்புகள் அந்த குறிப்பேட்டில் இருந்ததா என்று காவல்துறையினர் விசாரித்து பார்த்தார்கள் என்றால்

விசாரிக்கவில்லை. என்னை காவல்துறையினர் விசாரித்ததற்கு கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. நான் எவ்வித பணிகளை மேற்கொண்டேன் என்பது குறித்து அறிக்கையை உயர் அதிகாரிகளிடம் கொடுத்தேனா என்றால் நான் ராமலிங்கத்திடம் கொடுத்தேன். காவல்துறையினர் என்னை விசாரிக்கும்போது நான் மேற்கொண்ட பணியினை குறித்து விசாரித்தார்களா என்றால் நான் மேற்கொண்ட பணியினை மட்டுமே விசாரித்தார்கள். எதிரியின் மீது துறை ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்றால் தெரியவில்லை. நான் ஆய்வு பணியினை சரிவர மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு ஆய்வு பணியினை சிறப்பாக செய்திருந்தால் நான் விசாரித்த குடும்ப அட்டைதாரர்களிடம் வாக்குமூலம் பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த அறிக்கை குறைபாடு உடைய அறிக்கை என்றால் சரியல்ல. அந்த அறிக்கை சட்டப்படி செல்லத்தக்கது என்றால் சரியல்ல.

கு.வி. முடிக்கப்படுகிறது.

ம.வி. இல்லை.

என்னால் ... எனக்கு படித்துக் காட்டப்பட்டு ... ஏற்கப்பட்டது.

... நடுவர்
... காரைக்கால்

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code Criminal Procedure)
IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.I, NAGAPATTINAM

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No: CC. 9/16 CSCID Ps

Deposition of witness for :PW .7 (LW7 )

Name : ராமலிங்கம் | Village /Taluk : கடலூர்
Father's Name : கோவிந்தசாமி | Caste /Religion : இந்து
or Husband Name: | Age /Calling : 61/17

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.01.17

முதல் விசாரணை

நான் தற்போது கடலூரில் வசித்து வருகிறேன். நான் இறுதியாக விழுப்புரம் மாவட்டத்தில் கூட்டுறவு சங்கத்தின் துணைபதிவாளராக பணிபுரிந்து 31.05.14 அன்று ஓய்வு பெற்றுள்ளேன். நான் மயிலாடுதுறை கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் துணை பதிவாளர் தனிஅலுவலர் கூடுதல் பொறுப்பில் 2011ல் பணிபுரிந்தேன். அப்போதுதான் மயிலாடுதுறை சரக துணைபதிவாளராக பணிபுரிந்து வந்தேன். மயிலாடுதுறை கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் துணை பதிவாளர் தனிஅலுவலர் கூடுதல் பொறுப்பில் இருந்தபோது கடந்த 18.07.11 முதல் 28.08.2011 வரை மயிலாடுதுறை கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் சீர்காழி கிளையில் முறைகேடுகள் நடந்தது தொடர்பாக 100% ஆய்விற்கு நாகப்பட்டினம் மண்டல இணைபதிவாளர் அவர்கள் ஆணையிட்டிருந்தார். அதியமான் கூட்டுறவு சார்பதிவாளர், ராமலிங்கம் கூட்டுறவு சார்பதிவாளர், மணிமாறன், கூட்டுறவு சார்பதிவாளர், ராஜகோபாலன், கூட்டுறவு சார்பதிவாளர், திருமதி. தனலெட்சுமி கூட்டுறவு சார்பதிவாளர், ஆகியோர் அடங்கிய குழுக்கள் 100% ஆய்வு செய்து அறிக்கை 28.08.2011 அன்று சமர்பித்தது. அந்த அறிக்கையின்படி சீர்காழி வடக்குரதவீதி அங்காடியின் விற்பனையாளர் மாலதி என்பவர் தற்காலிக பணிநீக்கம் செய்ய உத்தரவிட்டேன். மேற்படி விவரம் தொடர்பாக சிஎஸ்.சி.ஐ.டி போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

வழக்கறிஞர் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை என கூறுகிறார்.

24.1.2017

THE JUDDICIAL MAGISTRATE NO II
20 JAN 2025
MAYILADUTHURAI

24.1.17

24.01.17

நாகப்பட்டினம்

C.C.9 /16 CSCID PS ராமலிங்கம், த/பெ.கோவிந்தசாமி PW 7 14.06.2018

மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் கடந்த 31.05.2014ல் விழுப்புரம் மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்களில் துணைபதிவாளராக இருந்து ஓய்வு பெற்றுள்ளேன். சம்பவ சமயத்தில் நான் கூட்டுறவு சங்கங்களின் துணைபதிவாளராக மயிலாடுதுறையில் பணிபுரிந்தேன். மயிலாடுதுறை மொத்த விற்பனை கூட்டுறவு பண்டகசாலையில் துணை பதிவாளர்/தனிஅலுவலராக கூடுதல் பொறுப்பு வகித்து வந்தேன். சீகாழி வடக்குரத வீதியில் உள்ள கூட்டுறவு அங்காடியில் 100% ஆய்விற்கு இணைபதிவாளர் உத்தரவிட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்கண்ட ஆய்வறிக்கை இணைபதிவாளருக்கு அனுப்பப்பட்டு பின் எனக்கு அனுப்பப்பட்டது. மேற்கண்ட பண்டகசாலையில் துணைபதிவாளர் மற்றும் தனி அலுவலராக நான் இருப்பதால் எனக்குதான் அந்த பண்டகசாலை குறித்து புகார் கொடுக்க அதிகார வரம்பு உள்ளது என்றால் சரிதான். அதன்படி நான்தான் புகார் கொடுத்தேன். காவல்துறையினர் 3,4 முறைகள் விசாரித்தார்களா என்றால் ஒரு தடவைதான் விசாரித்தார்கள். விசாரணை வாக்குமூலத்தை யார் எழுதியது என்றால் ஞாபகமில்லை, நான் கையொப்பம் இட்டுள்ளேன். இருப்பு குறைவானது சாதாரண எலிகடித்தல் மற்றும் சிந்துதல் போன்ற சாதாரண சூழ்நிலையிலும் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் இருப்பு குறைவு குறித்து விற்பனையாளருக்குதான் தெரியும். ஆய்வறிக்கையின் அடிப்படையில் இந்த புகார் கொடுத்திருக்கும்பட்சத்தில் விற்பனையின் அளவை மிகைபடுத்தி இருப்பு குறைவு ஏற்படுத்தியுள்ளதாக எதிரிமீது குற்றம்சாட்டியிருக்கிறேன் என்றால் விசாரணை அதிகாரிதான் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார். விசாரணை அதிகாரிகள் சம்மந்தப்பட்ட குடும்ப அட்டைதாரர்களிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றுக் கொண்டாரா என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. ஒவ்வொரு கூட்டுறவு அங்காடியிலும் அ பதிவேட்டில் உள்ள விற்பனை அளவு பதிவுகளும், குடும்ப அட்டையில் உள்ள விற்பனை அளவு பதிவுகளும் ஒருசேர உள்ளனவா என்று ஒப்பிட்டு பார்த்தேனா என்றால் அதை சரிபார்க்கும் பணி என்னுடையது அல்ல. ஆய்வறிக்கையின் உண்மை தன்மை பற்றி விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். இந்த விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். ஒரு அங்காடியில் இருப்பு குறித்து இரண்டு முறைகள் கடைபிடிக்கப்படுவது உண்டு என்றால் அவ்வாறு இல்லை, ஒவ்வொரு அங்காடியிலும் ஒரே இருப்பு பதிவேடு மட்டுமே உள்ளது. அதில் உள்ள பதிவுகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுவாக அங்காடிக்கு லாரியிலிருந்து பொருட்கள் ஏற்றி வரப்படும் என்றால் சரிதான்.

அவ்வாறு அங்காடியில் இறக்கப்படும் பொருட்களை அளவீடு செய்வதற்கான உபகரணங்கள் உள்ளனவா என்று தெரிந்து கொண்டேனா என்றால் அங்காடியில் உள்ள நபர்கள் சந்தேகப்பட்டால் அந்த மூட்டைகளை அளவீடு செய்து சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ளலாம். புகார் கொடுத்தபோது அதற்குரிய ஆவணங்களை புகாருடன் குடிமைபொருள் வழங்கல் புலனாய்வு துறைக்கு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். ஆய்வறிக்கையில் ஆரம்ப இருப்பு, இறுதி இருப்பு இருப்பதை உறுதி செய்து கொண்டேனா என்றால் அதை உறுதி செய்யவேண்டிய அவசியம் இல்லை. எனக்கு முன்னால் சாட்சி அளித்த அசா1 குணசேகரன் பிரிவு 81 கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவின்படி விசாரணைக்கு உத்தரவிட்டாரா என்றால் எனக்கு தெரியவில்லை. புகாரை நான் கொடுக்கவில்லை, குணசேகரன்தான் புகார் கொடுத்தார் என்றாலும், புகாரினை நான் கொடுத்ததாக தவறாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

14.6.2018
(G. Ramalingam)

கு.வி. முடிக்கப்படுகிறது.

ம.வி. இல்லை.

14.6.18
14.6.18

-203-

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code Criminal Procedure)
IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.I, NAGAPATTINAM

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions
Deposition of witness for :PW .8 (LW8 )

Case No: CC. 9/16 CSCID Ps

Name : ஸ்டாலின்
Father's Name : முனுசாமி
or Husband Name:

Village /Taluk : சீர்காழி
Caste /Religion : இந்து
Age /Calling : 42/17

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.01.17

**முதல் விசாரணை**

நான் தற்போது சீர்காழி திருவந்திகட்டளை என்ற ஊரில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். நான் ரேஷன் கடையில் ஜாமான் வாங்க நான் செல்லமாட்டேன். எனது வீட்டில் உள்ள நபர்கள் சென்று வாங்குவார்கள். எனது குடும்ப அட்டை எண் எனக்கு தெரியும். கடந்த மேல மாதம் 2011ம் வருடத்தில் ரேஷன் அரிசி பொருட்கள் எதுவும் நான் வாங்கவில்லை. நான் அரிசி வாங்கவில்லை என்ற விவரத்தினை சிஎஸ்.சி.ஐ.டி போலிசார் விசாரணையின்போது சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதற்காக இங்கு விசாரணைக்கு வந்துள்ளேன் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

கு.வி. முடிக்கப்படுகிறது.

ம.வி.இல்லை.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, ... படித்துக் காட்டப்பட்டு ... சரியானதென்று ஒப்புக்கொள்ளப்பட்டது
24.01.17
... நாகப்பட்டினம்
24.1.17

THE JUDDICIAL MAGISTRATE NO II
JAN 2025
MAYILADUTHURAI

-205-

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII code Criminal Procedure)

IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.I, NAGAPATTINAM

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No: CC .9/16 CSCID Ps

Deposition of witness for : PW .9(LW10 )

Name : பொற்கொடி

Village /Taluk : சீர்காழி

Father's Name :

Caste /Religion : இந்து

or Husband Name: ரவிச்சந்திரன்

Age /Calling : 45 / 17

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 17.05.17

முதல் விசாரணை

நான் தற்போது சீகாழியில் வசித்து வருகிறேன். நான் வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். சீர்காழி வடக்கு ரத வீதியில் உள்ள நியாய விலைகடையில் அரிசி, பருப்பு போன்ற பொருட்களை வாங்க வேண்டும். எனது ரேஷன்கார்டை வாங்கிகொண்டு அடுத்த நாள் என் கையெழுத்தை வாங்கி கொண்டு அதனை கொடுத்தார்கள். வாங்கிய தேதி சரியாக ஞாபகமில்லை. என் குடும்ப அட்டை எண் 213 ஆகும். நான் எல்லா மாதங்களும் அரிசி, பருப்பு வாங்குவேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள், என்ன விசாரித்தார்கள் என்று ஞாபகமில்லை.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யவில்லை.

R-பொற்கொடி

THE JUDDICIAL MAGISTRATE NO II
JAN 2025
MAYILADUTHURAI

17.5.17

17.05.17

26.7.17

207

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code Criminal Procedure)
IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.I, NAGAPATTINAM

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No: CC 9/16 CSCID PS

Deposition of witness for :PW . 10(LW 11)

Name : செல்வராஜ் — Village /Taluk :

Father's Name : சிங்காரவேல் — Caste /Religion:

or Husband Name: — Age /Calling :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.07.17

முதல் விசாரணை

நான் தற்போது கடலூர் மாவட்டம் ஊமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.08.12ம் தேதி நாகை சிவில்சப்ளை சிஐடியில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது காலை 10 மணியளவில் நிலைய பொறுப்பில் இருந்தபோது நாகை பொதுவினியோக திட்ட துணைபதிவாளர் திரு. குணசேகரன் என்பவரிடமிருந்து தன்ராஜ் கண்காணிப்பாளர் பொதுவினியோக திட்டம் நாகை என்பவர் எடுத்து வந்து நிலையம் ஆஜர் செய்த எழுத்துமூல புகார் மனுவை பெற்று நிலைய கு.எண். 124/12 ச/பி. 6(2)(3) of TNSC (RDCS) order 1982 r/w. 7(1)(a) (ii) of EC ACt படி வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை.அதசாஆ 7. மேல் விசாரணைக்கு வழக்கு கோப்பை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

2011ஆம் ஆண்டு 11ம் மாதத்திலிருந்து 2012 முடிய நாகை சிவில் சப்ளை சிஐடியில் பணியில் இருந்தேன். புகார் எந்த தேதியில் வந்தது என்று தெரியுமா என்றால் 13.08.12ல் வந்தது. என்னிடம் ஆய்வாளர் வாங்கிய வாக்குமூலத்தில் இந்த விவரத்தைசொல்லியுள்ளேன். அன்றைய தேதியிலேயே முதல் தகவல் அறிக்கை நான் பதிவு செய்துள்ளேன். வெறும் புகார் மனு மட்டும்தான் வந்தது, அந்த அறிக்கை எதுவும் வரவில்லை. அதற்கான ஆதரங்கள் எதையும் நான் பார்க்கவில்லை.

கு.வி. முடிக்கப்படுகிறது.

ம.வி. இல்லை.

THE JUDDICIAL MAGISTRATE NO II MAYILADUTHURAI JAN 2025

13/7/17

13.07.17

13.7.17

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code Criminal Procedure)
IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.I, NAGAPATTINAM

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No: CC 9/16 CSCID PS

Deposition of witness for :PW .11 (LW 11 )

| | | | |
|---|---|---|---|
| Name : | ராதாகிருஷ்ணன் | Village /Taluk : | |
| Father's Name : | ராஜு | Caste /Religion: | |
| or Husband Name: | | Age /Calling : | 49/17 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **10.08.17**

***முதல் விசாரணை***

நான் தற்போது வணிகவியல் குற்றப்புலனாய்வு பிரிவில் கரூரில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2012ம் வருடம் நாகை குடிமை பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு துறையில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது 13.08.12ம் தேதி காலை 10 மணிக்கு நாகப்பட்டினம் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளர் செல்வராஜ் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது நாகை மாவட்ட பொதுவிநியோக திட்ட துணை பதிவாளர் குணசேகர் என்பவரிடமிருந்து தண்ராஜ், கண்காணிப்பாளர் பெற்றுவந்த எழுத்துமூலமான புகாரை பெற்று நிலைய கு.எண். 124/12 ச/பி. 6 (2)(3) of TNSC (RDCS) order 1982 r/w. 7(1)(a) (ii) of EC Act 1955 ஆக வழக்கு பதிவு செய்து அசல் மற்றும் நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், வழக்கு கோப்பை என் மேல் விசாரணைக்கு வைத்திருந்ததை எடுத்துகொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இவ்வழக்கின் சாட்சிகளான குணசேகர், ராமலிங்கம், அதியமான், தனலெட்சுமி, மணிமாறன், ராஜகோபாலன், ராமலிங்கம், ஸ்டாலின், பக்கிரிசாமி, பொற்கொடி,செல்வராஜ் சிறப்பு உதவி ஆய்வாளர் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையிலும், ஆவணங்களை பரிசீலனை

செய்த வகையிலும், குற்றம் உண்மையானதால் எதிரி மீது ச/பி. 6 (2)(3) of TNSC (RDCS) order 1982 r/w. 7(1)(a) (ii) of EC Act 1955 படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் ஆஜர், எதிரி ஆஜர், குறுக்கு விசாரணை இல்லை என வழக்கறிஞர் கூறுகிறார்.

[illegible] 10/8/17
Insp. [illegible] CIU [illegible]

10.8.17